விலை சதம் 25

# காந்தீயம்

சத்தியம்

உண்மை அரசு செலுத்துமிடத்து வெற்றி தோன்றும்.

— மகாத்மா காந்தி

UNIVERSITY OF ... PERIODICAL

மலர் 15 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் )காந்தி ஆண்டு 108) 1977 நவம்பர்–திசெம்பர் | இதழ் 2-3

## யாழ்ப்பாணத்தில் காந்தி அடிகள்

இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன் - 1927 நவம்பரில் காந்தியடிகளை எமது நாட்டில் வரவேற்கும் வாய்ப்புப் பெற்ற வாலிபர்களில் ஒருவனுக நானும் இருந்தேன். வேறு எந்தத் தேசங்களிலும் பார்க்க எங்கள் நாட்டிற்கும் இந்தியாவிற்கும் இடையிலிருந்த தொடர்பு மிகவும் நெருங்கியது. புத்தர்-அசோகர் காலம் எப்படி வரலாற்றில் உலகப் பிரசித்தி வாய்ந்ததோ, அதேபோல காந்தி-நேரு காலமும் பிரசித்தமானதாகும். இக்காலத்தில் இந்தியப் பிரதிநிதிகளாகப் பலர் இங்கு வந்தனர். இவர்களில் சரோஜினிதேவி, இராஜகோபாலாச்சாரி, நேரு, இரவீந்திரநாத் தாகூர், ஜெயப்பிரகாஷ்நாராயண் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். ஆனல், இவர்களுள் மகாத்மாவின் வருகை இலங்கை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்கதாகும்.

இப் பெரியார்களிடமிருந்து பெற்ற ஊக்கத்தினுல் காந்தி அடிகள் வந்து ஐந்து ஆண்டுகளுக்குப்பின் 1932 சித்திரை வருடப் பிறப்பன்று எமக்குக் கிட்டிய தேச சுதந்திரத்தின் சின்னமாகிய மஞ்சள், சிவப்பு, பச்சை மூவர்ணக் கொடியை யாழ்ப்பாண மைதானத்தில் அச்சமின்றிப் பறக்கவிட்டோம்.

மகாத்மா காந்தி அடிகள் இலங்கை மக்களாகிய எமக்கு அளித்த விசேட செய்தி இன்றும் பொருத்தமாக இருக்கிறது!

இந்நாட்டில் மூன்று துறைகளில் சமூகப் புரட்சி வேண்டுமென்று வற்புறுத்தினுர். முதலாவதாக ''ஏழையென்றும் அடிமையென்றும் எவருமில்லை அவனியில் இழிவு கொண்ட மனிதரென்போர் இலங்கையில் இல்லையே'' என்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று வேண்டினுர். கண்டி, மாத்தளை, பதுளை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் பௌத்தர்களுக்கு புத்தபெருமானின் கொள்கைகளை எடுத்துக்கூறி, இந்துக்களுக்கு இந்து சாஸ்திரங்களை அத்தாட்சியாகக் காட்டி தீண்டாமையை முற்றாக ஒழிக்குமாறு வேண்டினுர்.

இரண்டாவது, இந்தியாவில் இனப்பாகுபாடு ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்க, ஈழத்தில் அதை நாம்

(5 ஆம் பக்கம் பார்க்கவும்)



இந்த ஓவியம் காந்திஜீயின் 1927 நவம்பர் யாழ்ப்பாணம் விஜயத்தை நினைவூட்டுகிறது.

சர்வோதய தத்துவ திங்கள் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அமைதிக்கு வழி!

## டாக்டர் குமரப்பா கூறுகிறார்

“பொருளாதாரச் சிக்கல்களே இன்றைய உலக நோய்க்குக் காரணம், வன்முறையையும், போர்களையும் ஒழிக்கவேண்டுமென்றால் உற்பத்தி பரவல் முறையில் அமையவேண்டும். சுயதேவைப் பூர்த்தி இலட்சியத்தை ஏற்கவேண்டும்” என்று காந்தியடிகளின் நெருங்கிய சீடரும் சிறந்த பொருளாதார நிபுணருமான டாக்டர் குமரப்பா கூறுகிறார்.

மகாத்மா காந்தியடிகள் உலக நாடுகளுக்குள் எழும் சச்சரவுகளின் காரணங்களையும் அவற்றைத் தவிர்க்கும் வழிகளையும் எப்படி ஆராய்ந்தார் என்றும் எச்சாதனங்களை அவர் கையாண்டார் என்பதைப் பற்றியும் கூற விரும்புகிறேன்.

### சத்தியமே கடவுள்

பல்லாயிரக்கணக்கான வருடங்களாக இந்துக்கள் அமைதியை நிலைநாட்டும் வழியில் வாழ்க்கையை முறைப்படுத்தியுள்ளனர். ஆகவே அகிம்சையும் சத்தியமும் எங்களிடையே வேரூன்றி இருக்கின்றன. அவர்கள் சத்தியமேகடவுளென்றும் அறமே வாழ்க்கையின் பயனென்றும் கொண்டார்கள். அது மட்டுமல்ல பல்லுயிரும் தத்தம் தர்மத்தைப் பெற்றிருந்தன. மனிதனின் அறம் அவன் தன்னை அமைதியில் அமைத்துக் கொள்வது.

### வாழ்க்கை முறையை மாற்றவேண்டும்

இன்று வாழ்க்கைத் தத்துவம் மனிதனை ஒரு பொருளாதார பிராணியாகச் செய்து விட்டது. பண்டங்களை உற்பத்தி செய்வதே அவன் தர்மம் என்றாகி விட்டது இக்காலம். இது மனிதவாழ்க்கையின் பயனை இழிவுபடுத்துவதேயாகும். பண்டங்களை ஏராளமாகப் பெற்றிருப்பதிலே நம் வாழ்க்கை அடங்கி விடாது. சோற்றாலேயே வாழ்வதில்லை. தவறான மதிப்புக்களை உண்டாக்கிக் கொண்டு மனிதன் தன் தர்மத்திலிருந்து வழுவிவிட்டான். நாம் அமைதியை உண்டாக்க விரும்பினால் நம் வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றியமைக்கச் சித்தமாக இருக்க வேண்டும். அவ் வழியில் இன்று அவசியமெனக் கருதும் பல பண்டங்களை நாம் கைவிடத் தயாராக வேண்டும். தர்மத்தை நிலைநாட்டுவதனாலேயே உலக அமைதி உண்டாகும்.

### அணுகுண்டு செய்தது பைத்தியகாரத்தனம்

வலுப்பெற்றவர்களின் தர்மம், மெலிந்தவர்களைக் காப்பாற்றுவது தான். புலியின் தர்மம் பிறிதொன்றைக் கொல்லுவதாகலாம். ஆயின் அது மனித தர்மம் அன்று. மனிதத் தன்மையில் இவ்விஷயம் பரவி எப்படி அவன் யுத்தத்திற்குத் தயாரானான் என்றும், அவன் துய்ப்புப் பண்டங்களால் அழுத்தப் படுகிறான் என்றும் நாம் ஆய்ந்தறியவேண்டும். அமைதியாகச் சிந்திப்பின் அணுகுண்டு செய்ததே பயித்தியத்தின் அறிகுறி. மனிதன் தன் அறத்தினின்றும் இழிந்து இம்சைக் காட்டிற்குள் திக்குத்தெரியாது அலைகின்றான். மனிதன் நிறைவடைவதற்கும் அவனை வெளிப்படுத்திக் கொள்வதற்கும் மீண்டும் தர்மம் வற்புறுத்தப் படவேண்டும். இதைச்செய்யவே காந்தியடிகள் சத்தியம், அகிம்சை இவைகளின் ஆராய்ச்சியாக வாழ்க்கையை அமைத்தார்.

### உலக நோய்க்குக் காரணம் என்ன?

இன்றைய உலக நோய்க்குக் காரணம் அதன் பொருளாதாரச் சிக்கல்களே: நாம் வாழ்க்கையின் பயன் ஏது என்பதை அறியாது மண் பொருளைப் பெற அலைந்து திரிகிறோம். எனக்குள்ள சிறு பொழுதில் அனுபவரீதியில் உள்ள நிலையைத் துருவி ஆய்ந்து அனுபவ சாத்தியமான பரிகாரங்களையும் சொல்ல முயலுகிறேன்.

### சிறு தவறுகளின் பலனே உலகப்போர்கள்

இன்றைய உலக யுத்தங்கள் தனித்து நிகழ்பவையன்று. சாதாரண மக்கள் விஷயம் தெரியாமல் தினந்தோறும் செய்யும் தவறுகள் பலவற்றின் தொகுப்பின் பயனாகவே யுத்தம் தோன்றுகின்றது. யுத்தம் சில தலைவர்களால் தோற்றுவிக்கப்படுவதாகக் காணப்படினும், நம்முடைய தினசரி வாழ்க்கையாலேயே அவை நிகழ்கின்றன. உதாரணமாக நகர மக்கள் பால் வாங்குகிறார்கள். ஆனால் அவர்கள் கன்றுக்குப்பால் விடப்பட்டதா, பால்காரனின் குழந்தைக்குப் பால் கொடுக்கப்பட்டதா, என்பதைத் தெரிந்து கொள்வதில்லை. கன்றுகளுக்கும் பால்காரனின் குழந்தைகளுக்கும் கொடுக்கப்பட்டு மீதப்படாத பாலாயின் அதை வாங்குவது அதர்மமே. அத்தகைய சிறு அதர்மங்கள் குவிந்து உலக யுத்தங்களாக விரிகின்றன. ஆகையால் உற்பத்தியாளன், பண்டங்களைத் துய்ப்பவன், விநியோகம் செய்பவன் ஆகியவர்கள் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுவது அவசியமாகிறது. அதற்கு உற்பத்தியைப் பரவலாக அமைக்க வேண்டும். சுயதேவைப் பூர்த்தி இலட்சியத்தை ஏற்கவேண்டும். இவ்வழியில் யுத்தத்தின் காரணங்களை அகற்ற வேண்டுமென்று காந்தியடிகள் கூறினார்.

### குவியல் முறை உற்பத்தி அதர்மம்

இன்று உற்பத்தி குவியல் முறையில் நடைபெறுகிறது. மூலக்கச்சாப் பொருள்களோ உலகின் பல மூலைகளிலிருந்தும் சேகரிக்கப்படுகின்றன. முன்னேற்றமடையாத மக்களிடமிருந்து அவை பற்றப் படுகின்றன. இதெல்லாம் அதர்மமல்லவா?

### போருக்கான மூலகாரணங்கள்

விநியோக முறையும் இயற்கையை ஒட்டி அமைவதில்லை. செயற்கை முறையில் தேவைகள் பெருக்கப்படுகின்றன. விற்பனை முறை அதற்கு வழி செய்கின்றது. இதுவும் அதர்மமே. இது பலாத்காரத்திற்கே வழியிடுகின்றது.

### தேவைக்கும் வாங்கும் பண்டங்களுக்கும் சம்பந்தமில்லை

துய்ப்பவனின் இயற்கைத் தேவைக்கும் அவன் வாங்கும் பண்டங்களுக்கும் சம்பந்தமில்லை. அவைகளுக்குள் பொருத்தமும் இல்லை, முறையுமில்லை. உற்பத்தியாளனை நிலையிலமர்த்தும் வண்ணம் துய்ப்பு முறைப்படுத்தப்படுகிறது, விநியோகிக்கும் வியாபாரியின் நலனும் பேணப்படுகிறது. இம்முறையால் இடறென்று கலவரங்கள் தோன்றுகின்றன.

(7 ஆம் பக்கம் பார்க்க)

★ கிராமக் கைத்தொழில்களை ஆதரியுங்கள் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம்

## 1976 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான திரட்டிய கணக்கு

### வரவு

| | ரூபா | சதம் |
|---|---|---|
| கொடை | 31,763 | 32 |
| ஒப்பப் பணம் | 670 | 00 |
| வட்டி | 256 | 18 |
| வருமானம் | | |
| கால்நடை | 2180 | 00 |
| ட்ருய்க்டர் | 20706 | 50 |
| விவசாயம் | 15679 | 15 |
| கிணறுதோண்ட கொடை | 1350 | 00 |
| கால்நடை விற்பனையில் — இலாபம் | 2355 | 00 |
| சர்வோதய பாத்திரம்-காசு | 80 | 51 |
| - அரிசி | 2475 | 20 |
| கட்தாசி உறைகள் விற்பனை | 80 | 66 |
| இசை நிகழ்ச்சி | 1150 | 00 |
| அரசாங்கத்தின் பராமரிப்புக் கொடை | 10378 | 75 |
| ,, கண்காணிப்புக் கொடை | 38 | 50 |
| நீதிமன்றங்க்ளிலிருந்து வருமானம் | 510 | 00 |
| வாடகை | 750 | 00 |
| பிற வருமானம் | 2325 | 78 |
| நெல் விற்பனை | 4729 | 25 |
| வருமானத்துக்கு அதிகமான — செலவு | 3005 | 89 |
| ரூபா | 1,00,434 | 69 |

## சர்வோதய

### கருத்தரங்கம்

மகாத்மா காந்தியடிகளின் சர்வோதய தத்துவத்தை மக்களிடையே பரப்பி சாவோதய சமுதாயத்தை அமைக்கும் நோக்கமாக அகில இலங்கைக் காந்திசேவா சங்கம் மாவட்டங்கள் தோறும் சர்வோதயக் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது.

இதுவரை யாழ்ப்பாணம், வவுனியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு, வதுளை ஆகிய மாவட்டங்களில் சர்வோதய கருத்தரங்கும் நடைபெற்றுள்ளது.

அடுத்த கருத்தரங்கை அட்டனில் நடத்த ஒழுங்கு செய்யப்படுகிறது. இக் கருத்தரங்கு பற்றிய விபரங்களை அறிய விரும்பும் அன்பர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

அமைப்பாளர்,
சர்வோதய கருத்தரங்கம்,
½, 47 ஆவது ஒழுங்கை, கொழும்பு-6.

### செலவு

| | ரூபா | சதம் |
|---|---|---|
| வெளிச்சம் | 1161 | 84 |
| சம்பளம் | 32956 | 90 |
| போக்குவரத்து | 2974 | 05 |
| நானுவித செலவு | 841 | 77 |
| தோட்டச் செலவு | 1613 | 40 |
| பசளை | 4588 | 00 |
| விதை நெல் | 3595 | 75 |
| பூச்சி கொல்லி | 802 | 40 |
| பழுதுபார்த்தல் | 1932 | 45 |
| அறுவடை | 250 | 00 |
| விளம்பரம் | 25 | 25 |
| கால்நடைப் பராமரிப்பு | 2260 | 57 |
| பயிர் பராமரிப்பு | 10153 | 65 |
| சாப்பாடு ஏனைய | 263 | 75 |
| கணக்காய்வுக் கட்டணம் | 475 | 00 |
| அந்தியக் கிரியைகள் | 164 | 05 |
| பிரயாணம் | 5731 | 40 |
| தேய்மானம் | 3663 | 51 |
| விவசாய உற்பத்திக்குழு ஏக்கர்க் கட்டணம் | 60 | 00 |
| காப்புறுதி | 250 | 00 |
| எழுதுகருவி | 601 | 76 |
| பருத்திச் செய்கை | 357 | 00 |
| விடுதிச் செலவுகள் | 14521 | 76 |
| வைத்தியச் செலவுகள் | 322 | 39 |
| சிகையலங்காரம் | 259 | 00 |
| உடுப்பும் சலவையும் | 413 | 55 |
| தபால், தந்திச் செலவு | 648 | 10 |
| தொலைபேசி | 437 | 60 |
| மக்கள் முயற்சிகள் | 169 | 05 |
| காந்தீயம் — பத்திரிகை | 495 | 15 |
| காப்புறுதி — ட்ருய்க்டர் | 183 | 25 |
| உரிமம் — ,, | 141 | 12 |
| ,, கொழுவு வண்டி | 100 | 80 |
| ட்ருய்க்டர்ச் செலவு | 6041 | 70 |
| உரிமம் | 9 | 00 |
| மாணவருக்குப் புத்தகம் | 277 | 85 |
| உல்லாசப்பயணம் | 67 | 50 |
| மாணவர் விடுதி வைபவம் | 15 | 10 |
| வங்கிக் கட்டணம் | 213 | 20 |
| விடுதி கக்கூசுச் செலவு | 175 | 55 |
| கைவினை வேலைச் செலவு | 78 | 80 |
| வாடகை | 510 | 00 |
| பற்றிக் வேலைச் செலவு | 631 | 72 |
| பாலர் பாடசாலை | 50 | 00 |
| ரூபா | 1,00,434 | 69 |

★ இன்பம் வேண்டின் நல்லவை செய்க ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயம்

காந்தி நிலையம்
உருத்திரபுரம், (இலங்கை)
தொலைபேசி: 254
(கிளிநொச்சி)
காந்தி ஆண்டு 108
1977 நவம்பர் — திசெம்பர்


# மகாத்மாவின்

## பொன் - வரவு

மகாத்மா காந்தியடிகள் இலங்கைக்கு 1927 ஆம் ஆண்டில் வந்தார். அவர் வருகை தந்து இந்த நவம்பருடன் ஐம்பதாண்டுகள் கழிந்துவிட்டன. அரசியல், பொருளியல் விபரம் தெரியாத பருவத்தில் மகாத்மாவை நான் யாழ் இந்துக் கல்லூரியில் கண்டேன். இன்றும் அவர் சாந்த ரூபம் என் கண் முன் நிற்கிறது. அன்று அவர் ஓர் பாரத நாட்டுத் தலைவர் என்ற அபிமானத்தாலும் சமய குரவர்போல் மகாத்மா என்ற பெயர் தாங்கினர் என்பதாலும் உள்ளம் விம்மி உவகை கொண்டு அவரைப் போற்றினேன். பெரும்பாலோர் அவ்வாறே போற்றினர்கள். இன்று!

காந்தியடிகள் வெறுமனே இந்திய விடுதலைக்குப் போராடிய வீரரல்லர். இந்திய விடுதலையை மனிதகுல முன்னேற்றப் பாதையில் ஒரு கட்டமாக அமைத்துப் போராட்டம் நடத்தினர் அவர். இந்தியர்க்கும் இந்துக்களுக்கும் அவர் அபிமானம் வளர்த்து விடுதலை பெற்றுக் கொடுத்தார் என்பதால் மட்டும் தான் அவர் பெரியவரல்லர். உயர்ந்த ஓர் பொருளியல் திட்டத்தை, மனித வாழ்வின் சகல அம்சங்களையும் தழுவிய ஓர் ஆன்மிக அரசியலை உலகிற்கு அளித்தவர் அவர். இந்திய விடுதலைக்குப் போராடிய பொழுது அவர் தத்துவத்தை உலகம் அறியவில்லை. இன்று 50 ஆண்டுகள் கழித்து அவர் பெருமையை அவரின் தெய்வ வாழ்வின் பெருமையைவிட, அவரின் ஆழ்ந்த சமூகவியல், அரசியல் தத்துவங்களை உலகம் உணர்ந்து பாராட்டத் தொடங்கியுள்ளது.

இந்த ஐம்பதாவது ஆண்டில் எங்கள் நாட்டிற்கு அவர் தத்துவம் என்ன வழியைக் காட்டும்? இதை நாம் உணர்ந்து கடைப்பிடிப்பது அவசியம். அவருடைய போதனைகளில் இரண்டு அம்சங்களை நாம் நம் உள்ளத்தில் அழுத்தமாக வைத்து உழைத்தல் வேண்டும்.

முதலாவது கிராமக் கைத்தொழிலைத் தாபித்துவளர்த்து மேம்படுத்த வேண்டும். இதற்கு மூலதனமும், தொழினுட்பமும் நடுத்தர அளவினவாகவும் உழைப்பும் சேவை மனப்பான்மையும் உயரளவினும் வேண்டப்படுவனவாம். இன்று பாரிய கைத்தொழில்யுகம். இயந்திரயுகம். பெரிய மூலதனத்தை இட்டு எண்ணிக்கையளவில், தொகையளவில் உற்பத்தி செய்வதில் பிரயோசனமில்லை. நாடு முழுவதும் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் நல்ல முறையில் வினியோகம் செய்யப்படாமையினாலேயே நாட்டில் இடரும், பஞ்சமும் தோன்றுகின்றன. உற்பத்திச் சாதனங்களை அரசு கைப்பற்றி ஏராளமான நுகர்பொருள்களை ஆக்கிக் குவித்தாலும், அவை ஏழை எளியவர்க்குக் கிடைக்காமற் போகுமேயானால் உற்பத்தித் திறனால் நாட்டிற்கு மக்களுக்கு என்ன பயன்? இதை அறிந்தே மகாத்மா, ஆக்கும் சாதனங்களோடு — அதாவது உற்பத்திச் சாதனங்களோடு - வினியோக சாதனமும் -ஒருங்கிணைய வேண்டுமென்று கூறினார்.

உலகத்திலே உற்பத்தியில் மிக முன்னேறிய நாடுகளில் உற்பத்தியில்லாமலா மக்கள் வாடுகிறார்கள்? இல்லை. விநியோகம் செவ்வையில் நடைபெறாமலும், சில முதலாளிகளின் சுய இலாபம் தலைதூக்கியதாலுமே வாடுகிறார்கள். இதை நீக்குவதற்கு ஓரே ஒரு வழி, மகாத்மாவின் கிராம ராச்சிய வழியும் குடிசைக் கைத்தொழில் வழியும் சிறு கைத்தொழில் வழியுமாம். உற்பத்தியுடன், வினியோகத்தையும், மட்டாகச் சுயபூர்த்தியைத் திருப்தி பண்ணுமளவான நயத்தையும் இணைக்கக் கூடிய ஓரேவழி சிறுகைத்தொழிலாகும். மகாத்மாவின் மொழியிலிருந்தே இதை நாம் உணரலாம்.

“ஒவ்வொருவரும் தம் தேவையை நிறைவு செய்ய வேண்டிய அளவிற்கு வேலை செய்ய வேண்டும். இதனைப் பெற ஓரே வழி வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவற்றை உற்பத்தியாக்கும் சாதனங்கள், பொது மக்கள் கையில் இருக்க வேண்டுமென்பதாகும். இச்சாதனங்கள், பொருள்கள் எல்லார்க்கும் இலகுவில் கிடைக்கக் கூடியதாய் இருத்தல் வேண்டும்.” “சாதனங்கள் இயந்திரங்கள் குறித்த ஓரிடத்தில் குவிவதால்; வினியோகம் செய்வதற்கு நாம் சுற்றியலையவேண்டும். ஆயின் உற்பத்தியும் வினியோகமும் ஒருங்கிணைந்து குறித்த குறித்த பிரதேசங்களில் அமையுமானால் வினியோகம் இயல்பாகவே செம்மையில் நடைபெறும்” “உற்பத்தி, வினியோகம், நுகர்வு, மூன்றும் குறித்த குறித்த பிரதேசங்களுள் அமையும் போது, சோம்பல் ஒழியும்’ வினியோகம் பிரயாசைக்குரிய சம அளவில் தன்பாட்டிலேயே நடைபெறும். பிறர்க்கு விற்கவேண்டிய நிர்ப்பந்தமில்லாமையால் இலாப நோக்கம் மறையும்.” இது மகாத்மாவின் வாக்கு. இதைவிடச் சிறந்தசனநாயக சமதர்மமோ, விஞ்ஞான சமதர்மமோ கிடையாது. இத்தகைய பொருளாதாரத்திற்கு அரசின் உதவி தேவையில்லை. கூட்டு உழைப்பே அவசியம். தேசப்பிரயாசைஇன்றி சமூகம் முன்னேறாது. இம்முன்னேற்றத்திற்கு, மூலதனம், பாரிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

★ சர்வோதய நற் சமுதாயத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வினோபா விடை அளிக்கிறார்

கேள்வி: சர்வோதயத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

வினோபா: மற்ற எந்த ஒரு வேலைத்திட்டத்தைக் காட்டிலும் சர்வோதயத்தின் எதிர்காலம் மிகவும் பிரகாசமாக இருக்கிறது.

கேள்வி: அகிம்சைக்கு நீங்கள் கொள்ளும் பொருள் என்ன?

வினோபா: அகிம்சையின் பொருளை இயேசு கிறிஸ்துவின் சொற்களினாலேயே வெளியிடுகிறேன் இயேசு நமக்கு இதை மூன்று வகையில் சொன்னார்.

(1) உன் அண்டையில் வசிப்பவரையும் உன்னைப்போலவே நேசி.

(2) நான் உங்களை நேசிப்பதைப் போலவே நீங்களும் மற்றவரை நேசியுங்கள்.

(3) எதிரியையும் நேசி. இதுவே அகிம்சையைப் பற்றிய எனது கருத்து.

கேள்வி: கம்யூனிசத்திலும் நிலத்தின் மீது தனி மனித உரிமை இருப்பதில்லை. சர்வோதயத்திலும் தனியுடைமை போய்விடுமென்கிறீர்கள் . இரண்டிற்கும் என்ன வித்தியாசம்?

வினோபா: கம்யூனிசத்தில் ஒரு பெரிய குறை இருக்கிறது. அதில் தனி உடைமை உரிமை இராஜ்யத்தின் கைக்குப் போகிறது. ஒரு தனி மனிதனுடைய கைக்கு ஆட்சி வந்தால் அவன் எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தாலும் அவனால் ஒவ்வொரு கிராமத்தையும் கவனிப்பதென்பது முடியாது. இறுதியில் அரசாங்கம் மறைந்து போகும் என்கின்றனர் பொதுவுடைமை வாதிகள். ஆனால் துவக்கத்தில் மைய அரசு வலிமையுள்ளதாக இருக்கவேண்டும். சீனாவிலும் ருஷ்யாவிலும் அத்தகைய நிலைமைதான் உள்ளது. ஆகையால் நில உடைமையை அரசு உரிமையாக்குவது. தவறு. நிலம் தனி உரிமையாகஇருந்தால் விற்கப்பட்டுவிடும். அல்லது அடகுவைக்கப்படும். ஆகையால் சொத்துரிமை தனியுரிமையாகவும் இருக்கக் கூடாது. கிராம உடைமையாக் இருக்கவேண்டும். பாபா கண்டு பிடித்த இந்தப் புதுமை கம்யூனிசத்தைக் காட்டிலும் சிறந்தது. இதில் கம்யூனிசத்தின் தீமைகள் இல்லை. ஆனால் நன்மைகள் இருக்கின்றன.

## யாழ்ப்பாணத்தில் காந்தி ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ப்பதாகக் கண்டார். அவர் 22. 11. 27 இல் இலங்கை தேசிய காங்கிரசின் நிகழ்ச்சியின்போது கூறியதாவது: ''நாங்கள் இந்தியாவிலிருப்பது போலவே, நீங்களும் பல்வேறு சமூகங்களாகப் பிரிந்திருக்கிறீர்களென நினைக்கிறேன். தற்செயலாக இன்று நான் வகுப்பு வாதத்தை ஆதரிக்கும் கட்டுரைஒன்றை வாசித்தேன். இந்தியாவிலும் இக்கொடிய நோய் உள்ளது. கொடிய நோய் என்று அழைப்போமே தவிர இதை நாம் புகழுவதில்லை. கிறிஸ்தவர், இந்துக்கள், முஸ்லீம்கள், பௌத்தர், சிங்களவர், தமிழர் என்ற வேற்றுமைக் குரலை எழுப்பாது தேசிய ஒருமைப்பாட்டுடன் ஒரே குரல் எழுப்பாவிடின் சுயாட்சி உங்களுக்குக் கிட்டாது. உங்களால் பெறவும் முடியாது. சுயாட்சியானது. முற்றாக எமது மனப்பலத்திலும் இடர்களை எதிர்த்துப் போராடுவதற்கு எமக்குள்ள ஆற்றலிலும் தங்கியிருக்கின்றது.

மூன்றாவதாக, 26. 11. 1927 இல் யாழ்ப்பாணத்தில் உரையாற்றிய போது,''கிராமங்களை திறமையாக உருவாக்குவதுதான் சுயாளுகைக்குவழி'' என்று காந்தியடிகள் கூறினார். ஜனநாயகம் கீழிருந்தே அமைக்கப்பட வேண்டும். ஒரு சிலர் தலைநகரில் அமர்ந்து வேலைசெய்வது ஜனநாயகமாகி விடாது. வாக்குரிமை ஜனநாயகமானது ஆட்சியாளரை மாற்றுவதற்கு பயன்படுகிறதேயன்றி, அதன் அதிகாரம் முழுவதும் பிரசார பலத்திலும் ஆயுதந் தாங்கிய படையிலுமே தங்கியிருக்கிறது. ஒருவரையொருவர் விளங்கிக் கொள்ளும் தன்மையிலும் கலந்து பேசுவதை ஆமோதிக்கும் தன்மையிலுமே பங்கு கொள்ளும் ஜனநாயகம் தங்கியுள்ளது. சுயஆட்சிக் கிராமம் ஒன்றிலிருந்து தான்ஒரு சுயஉணர்வுள்ள சமூதாயம் தோன்றி,வருங்கால விவசாய, கைத்தொழில் நாகரிக செழிப்புக்கு அடிகோலுமென்பதை மகாத்மா தீர்க்கதரிசனமாக உணர்ந்திருந்தார். கிராமப் பஞ்சாயம் வாக்குரிமையால் தெரிவு செய்யப்படுவதில்லை, இதுதான் உண்மையான '' ஜனசக்தி''. மற்றது '' ராஜசக்தி'' என்று கொள்ளப்படும்.

இம் மூன்று வழிகளையும் அமுலுக்குக் கொண்டுவருவது எப்படி? ஒரே ஒரு வழி,மகாத்மாவின் அரும் பெரும் தத்துவங்களாகிய உண்மையையும் அகிம்சையையும் நாம் கடைப்பிடித்தொழுக வேண்டும். உண்மைச் சிந்தனை, சொல் , செயல் ஆகியவைகளே அகிம்சையாகும். உண்மையே முடிவு; அகிம்சையே வழி.

இவ்வாறு நீதியான சமுதாயத்தை உருவாக்க முன்வருவோர் தங்கள் சொந்த வாழ்க்கையில் நீதியுள்ளவர்களாக இருக்கவேண்டும். உண்மையான சர்வோதய சமுதாயம் அரசாங்க நடவடிக்கைகளினாலல்லாமல், தானாகவே உருவாகவேண்டும். தங்கள் வாழ்க்கையில் மனமாற்றம் அடைந்தவர்கள் தான் புதிய சமுதாயத்தை உருவாக்க உதவுவார்கள்.

இன்று இதைவிட வேறு வழியில்லை!

பேராசிரியர். கு. நேசையா

## அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

# 28 ஆவது ஆண்டு அறிக்கை

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் 28 ஆவது ஆண்டு அறிக்கையை மிக மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றோம். கணக்கு அறிக்கை வந்துசேர தாமதித்ததாலும் நாட்டுச் சூழ் நிலை காரணமாகவும் இந்தஆண்டுக் கூட்டம் இவ்வளவு தாமதமாகக் கூடவேண்டியுள்ளது என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவிக்கிறோம். இந்த ஆண்டுக் காலத்தில் பத்து நிர்வாக சபைக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. நிர்வாகசபை அங்கத்தவர்கள் பெருமளவில் ஒவ்வொரு கூட்டங்களிலும் கலந்து ஆலோசனைகூறி சங்கத்தை வழி நடாத்துவதற்கு பெரிதும் உதவியாய் இருந்தனர். திரு. கே. வி. ஆசாரி அவர்கள் நிர்வாக சபையில் இருந்து விலகியதும் அவரினிடத்துக்கு திரு. ச. வடிவேலு அவர்களை நிர்வாகசபைக்குச் சேர்த்துக்கொண்டோம். எங்கள் உபதலைவர்களுள் ஒருவரான திரு. தி. க. இராசசேகரன் அவர்கள் லீவு பெற்று வெளிநாடு சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு மத்தியில் நாட்டில் ஏற்பட்ட எதிர்பாராத வன்செயல்கள் காரணமாக நாட்டு மக்களிடையே பதட்ட நிலை ஏற்பட்டது. மக்களின் உயிர் உடைமைகள் நஷ்டமடைந்தும் தேசிய- சமூக கூட்டுணர்வு பெரிதும் பாதிக்கப்பட்டதும் பெரும் கவலைக்குரிய விஷயங்களாகும். எங்கள் சங்கமே இந்த நிலைமைக்காக கவலை தெரிவித்ததோடு இவ்வித நிலைமைகள் மீண்டும் தலைகாட்டாதிருக்க அரசாங்கமும் மக்களும் விழிப்பாக இருக்கவேண்டும் என வேண்டிக் கொள்ளுகின்றது.

### காந்தி நிலையம்

காந்தி நிலையம் மாணவர் இல்லத்தில் இந்த ஆண்டு மாணவர் தொகை குறைந்திருப்பதற்கு மூக்கிய காரணம் வளர்ந்த மாணவர்கள் வீடு திரும்பியமையாகும். மாணவர்கள் கல்வியிலும் விவசாயத் துறையிலும் திறமை காட்டியுள்ளார்கள். பொதுவாக சுயதேவைகளை பூர்த்தி செய்யும் முறையில் இப்பிள்ளைகள் வளர்ந்து வருகிறார்கள். புதிய மாணவர்களை இல்லத்தில் சேர்ப்பதற்கு இடங்கள் உண்டு. காந்தி நிலையத்தின் பேரால் கடன் இல்லாமல் இருக்கிறோம் என்பதையும், காந்தி நிலைய கணக்கிலிருந்து ஏனைய கிளை அமைப்புக்களுக்கு கடன் உதவி செய்யப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

### காந்திக் கிராமம்
### அக்கராயன்குளம்

தேசிய பட்டினி ஒழிப்புச்சபையின் உதவியுடன் 60 ஏக்கர் வரை விவசாயத்துக்குப் பயன் படுத்தப்பட்டது. முன்னாள் பதில் விவசாய அதிபர் திரு. எஸ். கனகரத்தினம் அவர்கள் எமது வேலைகளுக்கு மிகவும் உதவியாக இருந்தார்கள். அவருடைய தன்னலமற்ற சேவைக்கு இச்சங்கம் பாராட்டுதலையும் நன்றியையும் செலுத்துகின்றது.

தேசிய பட்டினி ஒழிப்புச்சபையின் தலைவர் திரு. மு. இராசேந்திரா அவர்களும் கார்ந்திக் கிராமம் வந்து வேலைகளைப் பார்வையிட்டார். தேசிய பட்டினி ஒழிப்புச் சபை மூலமாக மேற்கு ஜெர்மன் பட்டினி ஒழிப்புச் சபை உதவிய நிதி உதவிகள் மூலமாக இந்த வேலைகள் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. இது சம்பந்தமாக தேசிய பட்டினி ஒழிப்புச் செயலாளர் திரு. லயனல்டி சில்வா அவர்கட்கும் திட்ட அதிகாரி திரு. எல். அதிகாரம் அவர்கட்கும் உதவியாக இருந்த சகல பெரியாருக்கும் நன்றி கூறுகிறோம்.

சென்ற ஆண்டு 78,000 ரூபா வரையில் செலவு செய்யப்பட்டுள்ளது. காலநிலை காரணமாகவும் நிர்வாக கஷ்டங்கள் சில ஏற்பட்டமையினாலும் போதிய வருமானம் பெறமுடியவில்லை என்பதை கவலையுடன் தெரிவிக்கிறோம். இந்த அனுபவங்கள் புது ஆண்டுக்கு பயன்படும் வகையில் நிர்வாக அமைப்பு ஒழுங்குகளைச் சீர்படுத்தியும் வசதிகளைக் கூட்டியும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளோம். அத்துடன் கிணறுகள் அமைக்க தொடங்கியும் முகாமையாளர் விடுதியுடன் களஞ்சியம் கட்டவும் முயற்சிகள் செய்யப்படுகின்றன. அத்துடன் நீர்பாசனத்துக்கான இயந்திரங்கள் உபகரணங்கள் ஆகியவைகளை கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் கையாளப்பட்டுள்ளன. மேற்கு ஜேர்மன் பட்டினி ஒழிப்புச் சபை எங்கள் திட்டத்துக்கான நிதி உதவி செய்தமைக்கு நன்றி கூறுகின்றோம்.

காந்திக் கிராமம் பணிகளுக்கு அரசாங்கம் வழங்கிய காணியில் நடந்த அத்துமீறல் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுத்துவருகின்றோம். இந்த விவசாய வேலைகள் சீர்பட்டதும் வாலிபர் விவசாயப் பயிற்சித் திட்டம் காந்திய தத்துவங்களை உள்ளடக்கியதாக காந்திக்கிராமத்தில் அடுத்தஆண்டில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டிடக்கலைஞரும் ''உழவன்'' ஆசிரியருமான திரு. ச. அ. டேவிட் அவர்கள் இத்திட்ட அதிபராக கடமையாற்ற இணங்கியுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. சே. யோகநாதன் அவர்கள் தலைமையில் இப்பகுதியில் உள்ள ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களையும் காந்திய அன்பர்களையும் உள்ளடக்கிய ஒரு ஆலோசனைச்சபை இந்த வேலைகளை கண்காணித்து உதவி செய்து வருகின்றது.

### சர்வோதய நிகேதன்

சர்வோதய பாத்திர இயக்க மூலமாக இயங்கி வருகிறது. இந்த அமைப்பு ''காந்தீயம்'' பத்திரிகை[illegible] நடாத்துகிறது. உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் இருந்து மேல் வகுப்பில் படிக்கக்கூடிய மாணவர்கள் இங்கு அனுப்பப்பட்டு இலவச வசதிகள் செய்து கொடுக்கப் படுகின்றன. இங்கு சர்வோதய அச்சகமும், அச்சகப் பயிற்சியும் உண்டு. சமீபத்திய வன்செயல்கள்-சூழ்நிலைகாரணமாக சர்வோதய நிகேதன் வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அச்சகத்தையும் அச்சகபயிற்சியையும் கிளிநொச்சிக்கு மாற்றுவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ''காந்தீயம்'' பத்திரிகை தொடர்ந்து வெளி

(7 ஆம் பக்கம் பார்க்க)

★ சேவை செய்து சிறப்புற வாழ்க ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28 ஆவது ஆண்டு ... ...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. பத்திரிகைக்கான சந்தா, நன்கொடைகள், விளம்பரங்கள் உதவி ஆதரிக்க வேண்டுகிறோம்.

## அன்னை கஸ்தூரிபாய் இல்லம்

1958 இல் ஏற்பட்ட வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட அகதிகளைக் குடியேற்றிய தர்மபுரத்தில் பெண்களுக்கான இந்த இல்லத்தை நடாத்துவதற்கும் பயிற்சி அளிக்கவும் வேண்டிய சகல முயற்சிகளையும் நிர்வாக சபை கவனித்து வருகின்றது.

இந்த இல்லப்பணிகளுக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் அனுசரணையுடன் கொழும்பில் உள்ள '' சமசி '' நிதிச் சபையாரிடமிருந்து 25,000 ரூபா கடனுதவி பெறப்பட்டுள்ளது. சகோதரிகள் இ. சிவமலர், க. புஷ்பராணி ஆகியவர்கள் நிர்வாக சபையின் சார்பில் கஸ்தூரிபாய் இல்ல வேலைகளை கவனித்து வருகிறார்கள். திருமதி. ஐ. கமலேஸ்வரி அவர்கள் உதவி மேற்பார்வையாளராக கடமை ஏற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வோதய கிராமம் சிவபுரம் (பூநகரி வழி)

கிராஞ்சி கிராமத்தை சர்வோதய கிராமமாக அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இங்கு வன்செயல்களால் பாதிக்கப்பட்ட அகதிகளில் ஒருபகுதியினர் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அகதிகளைக் குடியமர்த்த அரசாங்கத்திடம் 300 ஏக்கர் நிலம் கோரி விண்ணப்பம் அனுப்பியுள்ளோம்.

## கிளைகள்

கொழும்பு, வவுனியா, மட்டக்களப்பு, பதுளை ஆகிய இடங்களில் கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன. வவுனியாக் கிளையை இயங்காமல் தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளோம். ஏனைய கிளைகள் நல்லமுறையில் இயங்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

## அனுதாபம்

கொழும்புக் கிளையின் தலைவர் திரு எஸ்.சோமசுந்தரம் அவர்களின் மறைவும் காந்திநிலைய அமைப்பு சபையின் தனுஷ்கோடி திரு. வ. சச்சிதானந்தம் அவர்களின் அகால மரணமும் மகாத்மா காந்தி நூற்றாண்டு சபையின் தலைவர் திரு. A. இரத்னையக்கா அவர்களினதும் செயலாளர் திரு. D. B எலப்பொல அவர்களினதும் மறைவு இயக்கத்திற்கு பேரிழப்பாகும். இவர்களது ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் இவர்களது குடும்பத்தினருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மகாத்மா காந்தியடிகளின் அறைகூவலுக்காக இந்தியா சென்று பணியாற்றிய தொண்டர் திரு. மு, சிவகுருநாதன் (குருஜீ) அவர்களுடைய மறைவும் இச்சங்கத்துக்கு ஒரு நஷ்டமாகும்.

இச் சங்கத்தின் முதல் தலைவரும் தேசிய சிந்தனையாளரும், சிறந்த முற்போக்கு - கல்விமானும் வழிகாட்டியும் ஆகிய திரு. ஹண்டி - பேரின்பநாயகம் அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும். இவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு இவரது கருத்து உணர்வுகளை ஞாபகமூட்டுகின்றோம்.

## முடிவுரை

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் கடந்த 28 ஆண்டுகளாக இந்நாட்டில் காந்திய அடிப்படையில் சமூக பணிகளைச் செய்ய முனைந்து நின்றுள்ளது என்றாலும் சங்க நோக்கங்கள் பூரணமாக நடப்பதற்கு காந்திய அன்பர்கள் போதிய அளவு திரளவில்லை. நிதி உதவிகளும் கிடைக்கவில்லை. காந்தீய கொள்கைகள் இந்நாட்டில் வளர்ந்து சமூக, பொருளாதார-அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டு மக்கள் வாழ்க்கை நிறைவுபெறவேண்டும் என விரும்புகின்றோம். காந்தீயக் கொள்கைகைகளில் ஆர்வம் கொண்ட இளைஞர்கள், தொண்டர்கள் இந்த முயற்சிகளில் பெரும்ஈடுபாடு கொண்டாலன்றி எமது நோக்கங்கள் பூர்த்தியாகாதென நம்புகின்றோம். நாட்டின் நல்ல வாழ்வுக்காக மக்கள் யாவரும் காந்தியடிகள் போற்றிவந்த பல நல்லெண்ணங்களை அனுசரித்து வாழவும் தொண்டுகள் செய்து மக்கள் வாழ்க்கையைமலரச் செய்யவும் நமது நிறுவனங்களுடன் சேர்ந்து உழைக்க வருமாறு வேண்டிக் கொள்கின்றோம். தொண்டு மனப்பான்மையுடன் - சுயநலமின்றி அன்பர்கள் அனுதாபிகள் ஓரளவாவது தங்கள் குடும்ப நலன்களையும் சொந்த நலன்களையும் ஒதுக்கிவைத்து - உதறித்தள்ளிவிட்டு இந்த மாபெரும் தியாக வேள்வியில் ஈடுபடுமாறு அழைக்கின்றோம். இந்தப் பிறவியிலேயே இயன்ற நற்பணிகள் செய்வதன் மூலம் நமது ஆன்ம திருப்தியைப் பெறுவோம்.

சி. க. வேலாயுதபிள்ளை,
பொதுச் செயலாளர்

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவை போருக்கு நம்மை இட்டுச் செல்வன. முதலாளித்துவ முறை, சாம்ராஜ்ய முறை, குவியல் முறை உற்பத்தியும் அமுலிலிருக்கும் வரை போர்கள் மனித வாழ்க்கையின் ஒரு அம்சமாகவே நிலைத்துவிடும். வேண்டுகோள்களும் விண்ணப்பங்களும் போர்களை நிறுத்தா.

## சுயதேவையும் பரவல் முறையுமே பரிகாரம்

காந்தியடிகள் சுயதேவைப் பூர்த்தியையும், உற்பத்தியைப் பரவலாய் அமைப்பதையும் வற்புறுத்தினார். சுயதேவை அடிப்படையில் நாம் செல்வது உலக நாடுகள் எல்லாவற்றாலும் எளிதாக ஏற்கக் கூடிய வழி. பெரியவர்களைப்பார்த்து தாம் சிறியவர்கள் என்று ஏங்கவேண்டியதில்லை. அவரவரால் ஆவதை அவரவர்கள் செய்யலாம். இது ஒரு அரிய உண்மை. பொறுப்பும் கூட. ஆனால் தன்னடக்கமும், தியாகமும் இல்லாமல் இதைச் செய்ய முடியாது. நாம் நம் பகுதி வேலையை ஏற்கத் தயாரா?

## சீலம் நல்லெண்ணம் கூட்டுறவு வளரவேண்டும்

நம்மிடையே நிலையான அடிப்படை சீலம் இருக்கிறது. அதன் வலிவைக் கொண்டு ஒவ்வொரு நாட்டையும் பிறிதுடன் கூடிப்பழகவும், சில அடிப்படையில் விவகாரங்களை அமைத்துக் கொள்ளச் செய்யவும் முடியும். குழந்தைகளின் படிப்புமுறையை மாற்றி அவர்கள் யாவரும் வளர்ந்தெழுந்து, சிலதின் உதவியையல்லாமல் ஆயுதங்களின் உதவியை நாடாதிருப்பவர்களாகச் செய்யவேண்டும். கூட்டுறவு, நல்லெண்ணம், பரஸ்பர விளக்கம் ஆகியவை வளரும் போதே நிலையான அமைதி உலகில் ஏற்படமுடியும். அத்தகைய மெலிந்தோரை வலியோர் சூறையிடமாட்டார்கள். முன்னேற்றமடைந்தோர், அடையாதவர்களை பணியச் செய்யமாட்டார். அவ்வாறு மனித உறவுகள் வளரும்போது உலகில் அமைதியும் நல்லெண்ணமும் நிலைபெறும்.

(13. 12: 1952 இல் வியன்னாவில் நடைபெற்ற உலக சமாதான காங்கிரஸ் மாநாட்டில் ஆற்றிய உரை.)

★ பிறருக்குத் தொண்டு செய்வதே கடவுள் வழிபாடுதான் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிப் புரட்சி

ஒன்றிரண்டு அல்ல, ஆயிரம், ஆயிரம் சாதிகள், அவிழ்த்து விடப்பட்ட மூட்டையிலிருந்து உருண்டோடும் நெல்லிக் கனிகளைப் போல ......''

''தீண்டாமை எனும் இருள், அமாவாசை இருளைவிடக் கொடியதாக ...''

இந்த அடிகளை வாசிக்கும் பொழுது நமது சமுதாயத்தில் தீண்டாமை எவ்வளவு தூரம் ஆழப் பதிந்துள்ளது என்பது புலனாகின்றது.

பல நூற்றாண்டு காலமாக நாயன்மார்களும், ஆழ்வார்களும், சித்தர்களும் வித்தகர்களும், புலவர் பெருமக்களும் தீண்டாமையின் கொடுமையைச் சாடிவந்திருந்தாலும்கூட அதன் ஆதிக்கம் அழிந்த பாடாக இல்லை.

'' ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
... ... ... ... ... ... ... ... ...
அவர் கண்டீர் நாம் வழங்கும் தெய்வமாமே ''

'' சாத்திரங்கள் கற்ற சழக்கார் காள் கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்? ''

'' பறைச்சியாவதேதடா, பணத்தியாவதேதடா; இறைச்சி தோல் எலும்பிலே இலக்கமிட்டிருக்குதோ?

''சாதி இரண்டொழிய வேறில்லை''

இப்படி எத்தனையோ தேவாரங்கள், திருவாய் மொழிகள், கவிஞர் வாக்குகள் ...... இருந்தும் தமிழ்ச் சமுதாயத்தில் தீண்டாமையை அகற்ற முடிந்ததா?

'' தீண்டப்படாதென்று மக்களைச் சொல்வது தீமையில் தீமை-அதை
பூண்டோடு போக்க நாம் விரதம் புனைந்தது புண்ணியர் காந்தியினால்''

என்று உரத்த குரலிலே மேடைகளிலே பாடுபவர்கள், வீட்டுச் சுவர்களிலும், மேடைகளிலும் காந்தியின் படத்தை வைத்திருப்பவர்கள் எத்தனையோ பேர் உண்மையில் தீண்டாமை வெறி பிடித்தவர்களாகத் தான் இருக்கிறார்கள்.

இத்தகைய சூழ்நிலை நிலவி வந்த தமிழ்ச் சமுதாயத்திலே, சிறப்பாக தமிழ்ச்சமுதாயத்தின் தலைநகராம் வட இலங்கையிலே அண்மையில் நடைபெற்ற ஒரு அமைதிப் புரட்சி "யாவரும் கேளிர்'' என்ற ஒரு நிலையை, சாதி இனி இல்லை என்ற ஒரு தன்மையை தோற்றுவித்திருப்பதைக் கண்டு சமரச நோக்கம் கொண்ட எவரும் மகிழ்ச்சியடையாதிருக்க முடியாது.

உடுப்பிட்டித் தொகுதி, பொதுவாக சாதித் தடிப்பு மிகுந்த பகுதி என்பது பரவலான கதை. இந்தத் தொகுதியிலே அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட திரு.ரி.இராசலிங்கம் அவர்களின் மகோன்னத வெற்றி சாதிப்பாகுபாடு தமிழ்ச் சமுதாயத்தில் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டது என்ற உண்மையைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

திரு. இராசலிங்கம் அரசியலுக்குப் புதியவர். இதற்கு முன் புரட்சிக் கட்சிகள் எதிலும் அங்கம் வகிக்காதவர். தேர்தல் காலத்தில் அகில உலகத்தின் கவனத்தையும் கவர்ந்த ஒரு தொகுதியாக உடுப்பிட்டித் தொகுதி விளங்கியது. முற்போக்குக் கொள்கையாளர் என்று கூறப்பட்டவர்களின் சார்பிலே, மிகவும் கேவலமான முறையிலே சாதி அடிப்படையில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இத்தகைய சூழ்நிலையிலும் உடுப்பிட்டித் தமிழ்ப் பெருங்குடி மக்கள் திரு. இராசலிங்கத்தை ஏறத்தாழ பதினையாயிரம் மேலதிக வாக்குகளால் வெற்றி பெறச்செய்திருக்கிறார்கள். இத்தகைய புதுச்சரித்திரம் படைத்த வெற்றியொன்றைத் திரு. இராசலிங்கம் அவர்களால் பெற முடிந்தது என்றால், சாதியின் பெயரைச் சொல்லி மக்களை ஏமாற்றிய காலம் மலையேறிவிட்டது என்றுதான் பொருள். தமிழ் மக்கள் உடலினால் ஒருவராக இருந்தாலும் உள்ளத்தால் ஒன்று பட்டுவிட்டனர் என்றுதான் அர்த்தம்.

இந்தப் புதுமைப் புரட்சி ஏற்படக் காரணமாக இருந்த நாலு பகுதியினருக்கு நாம் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். அவர்களில் ஒருவர் உடுப்பிட்டித் தொகுதி வாக்காளப் பெருமக்கள். மற்றவர், தான் கடந்த ஏழாண்டு காலமாகப் பிரதிநித்துவம் வகித்துவந்த தொகுதியை இத்தகைய ஒரு புரட்சியை நடாத்துவதற்காக விட்டுக் கொடுத்த பொன்மனச் செல்வர் திரு.ஜெயக்கொடி அவர்கள். அடுத்தவர் அந்தத் தொகுதியிலே பிறந்து வளர்ந்து, அத்தொகுதி ம[illegible]ளின் பிரதிநிதியாக பல்லாண்டு காலம் சேவைசெய்து அவர்கள் மனதில் மங்காத இடத்தைப் பெற்றுள்ள, தங்கக் குணக்குன்றான, 'உடுப்பிட்டி சிவா'என அனைவராலும் அன்பாக அழைக்கப்படுகின்ற திரு.மு.சிவசிதம்பரம் அவர்கள். கடைசியாகக் குறிப்பிட வேண்டியவர், தந்தை வழியில், தந்தை எந்த இலட்சியத்துக்காகப் போராடினாரோ அந்த இலட்சியமே தன் இலட்சியமெனக் கருதி, பாராளுமன்ற ஆசனத்தைப் பற்றி எள்ளளவு எண்ணமுமின்றி, தேர்தல் காலம் முழுவதும் உடுப்பிட்டித் தொகுதியிலேயே தங்கி திரு. இராசலிங்கத்தின் வெற்றிக்காக இரவு பகலாக, எத்தகைய பிரதிபலனும் பாராது செயலாற்றிய சிங்கத் தமிழன் சந்திரகாசன் அவர்கள். இவர்கள் அனைவருக்கும் எமது நன்றி.

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயந்திரம் தேவையில்லை. கூட்டு உழைப்பே முக்கியம். இது பற்றி மகாத்மாவின் சீடரான குமரப்பா அவர்கள் கூறியதை நாம் மனதில் கொள்ளல் நன்று.

'' உழைப்பின் இயற்கையை நாம் நன்கு உணர்தல் வேண்டும். எவ்வாறு உணவு உடல் வளர்ச்சிக்கு அவசியமோ அவ்வாறே உழைப்பும் மனிதனின் உயர் புத்தியாற்றல்களுக்கு இன்றியமையாததாகும். உழைப்பு மனிதனின் உயர் ஆற்றலுக்கு ஊட்டம் அளித்து அவனை விலங்கினின்றும் பிரிக்கிறது.''

இதிலிருந்து புலப்படுவது என்ன? தொழில் நுட்பக் கல்வி மட்டும் தான் தனிக்கல்வியன்று. உடல் உழைப்பும் அறிவாற்[illegible] வளர்க்கும் ஓர் சாதனம்; மனிதனைப் பண்படுத்தும் ஓர் கருவி. எனவே எம் சமுதாயத்தினர் உழைப்பினையே உயர் கல்வி எனக்கொள்ள வேண்டும். அதனைச் சிறு சிறு கைத்தொழில்கள், உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுத்த வேண்டும். இது நம் நாட்டிற்கு மட்டுமன்றி மனித குலத்திற்கே முன்னேற்றமாய் அமையும் வழியாகும். எவ்வழி ஆடவர் நல்லவர் அவ்வளவில் நாடு நலம்பெறும். ஆடவர் என்பது ஆள் தவர் ஆகும். அதாவது தவம் ஆள்பவர் என்று பொருள்படும்.

இ. இ

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் திரு. சி. க. வேலாயுதபி[illegible] அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு — குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
Registered at the G. P. O as a Newspaper in Sri lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org